12.11.2025

OS. No.62/2019

**வா.சா.1 –** திரு.செந்தீபன், த/பெ.திரு.ஒண்டிமுத்து

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

நான் 12 ஆம் வகுப்பு வரை ஸ்ரீரங்கம், ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படித்திருக்கிறேன். எனது முகவரி 1/112 காவல் காரத்தெரு, தாளக்குடி, லால்குடி ஒன்றியம் ஆகும். நான் 2005 ஆம் வருடம் 12ஆம் வகுப்பை முடித்தேன். நான் 12 ஆம் வகுப்பு படிப்பை முடித்த காலத்தில் இருந்து கேபிள் டிவி தொழில் செய்து வருகிறேன். நான் 2005 ஆம் வருடம் தென்னூர் பகுதியில் கேபிள் டிவி கம்பெனியில் வேலை செய்து வந்தேன். அப்போது ஸ்டார் வியூ கேபிள் டிவி கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். நான் தற்போது அதே கூட்டு பங்கு நிறுவனத்தில் பங்குதாரராக இருக்கிறேன். நான் வேலை பார்த்த காலத்தில் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் கோடி என்பவர் பங்குதாரராக இருந்தார். அந்த ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் வேறு யாரெல்லாம் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்பது எனக்கு தற்போது வரை தெரியாது. நான் 2014 ஆம் வருடம் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் பங்குதாரராக சேர்ந்தேன். நான் வேலை செய்த காலத்தில் கணக்கு வழக்குகளை கோடி என்பவரிடம் தான் கொடுத்து வந்தேன். இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி சாலமன் ஆரோக்கியதாஸ் என்பவரை எனக்கு தெரியும். அவர் நாங்கள் தொழில் செய்து வந்த பகுதியில் அருகில் அவரும் கேபிள் டிவி தொழில்

செய்து வந்தார். அவர் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் எந்த காலத்திலும் பங்குதாரராக இருந்தது கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.03.1992 அன்று ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனமானது முதல் பிரதிவாதி சாலமன் ஆரோக்கியதாஸ் என்பவராலும் கோடி என்பவராலும் சேர்ந்து கூட்டுப் பங்கு நிறுவனமாக நடத்தி வரப்பட்டது என்றும், முதல் பிரதிவாதி தான் என்னை வேலைக்குச் சேர்த்தார் என்றும் தற்போது நான் வழக்கிற்காக அவர்களுக்கு இடையில் உள்ள பிரச்சனை காரணமாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தில்லை நகரில் உள்ள வழக்கறிஞர் அலுவலகத்தில் நான் உதவியாளராக வேலை பார்த்தேனா என்றால் இல்லை. நாளது தேதியில் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் கோடி என்பவர் பங்குதாரர் நிலையில் இருந்து விலகிச் சென்று விட்டார். தற்போது நானும் நரேஷ் என்பவரும் தான் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தை நடத்தி வருகிறோம். சூர்யா பைனான்ஸ் நிறுவனம் முன்பு தில்லைநகரில் உள்ள சரோஜா பில்டிங்கில் நடந்து வந்தது. தற்போது அண்ணாமலை நகரில் ஏபிசி மருத்துவமனைக்கு அருகில் இயங்கி வருகிறது. சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கும் எனக்கும் இடையில் 2010 ஆம் வருடத்தில் இருந்து தொடர்பு உள்ளது. நான் 2014ஆம் வருடத்தில் இருந்து ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் பங்குதாரராக இருந்து வருகிறேன். 2014ஆம் வருடத்திற்கு முன்பு வரை நான் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் வேலையில் தான் இருந்தேன். நான் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் எனது பங்கு தொகையாக

எவ்வளவு கொடுத்தேன் என்றால் நினைவில்லை. அது தொடர்புடைய ஆவணங்கள் இருக்கிறது. அதை பார்வையிட்டால் கூற முடியும். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் முடியும். எனக்கு 2010 ஆம் வருடத்திலிருந்து சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் உள்ளவர்களுடன் பழக்கம் இருக்கிறதா என்றால் அதில் உள்ள முத்துக்குமார் என்பவரை எனக்கு 2010 ஆம் வருடத்தில் இருந்து நன்கு தெரியும். அவரைத் தவிர வேறு யாரெல்லாம் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்கள் என்று தெரியாது. சூர்யா பைனான்ஸ் நிறுவனம் என்பது ஒரு கூட்டு பங்கு நிறுவனம் என்று தெரியும். நான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் தவிர வேறு யாருக்காவது சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து பணம் கடன் வாங்கி கொடுத்து இருக்கிறேனா என்றால் எனது நண்பர்கள் பலருக்கு வாங்கி கொடுத்திருக்கிறேன். அவ்வாறு சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து நான் பணம் வாங்கி கொடுத்ததாக கூறும் நண்பர்கள் பெயர் எனக்கு நினைவில்லை. நான் கடைசியாக யாருக்கு சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து பணம் கடன் வாங்கிக் கொடுத்தேன் என்றால் இந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகள் இருவருக்கு மட்டும்தான் வாங்கி கொடுத்தேன். நான் கேபிள் டிவி தொழில் தவிர பைனான்ஸ் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. பார்த்தசாரதி என்ற ஒரு நபர் மீது அவர் எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு ஒரு வழக்கு தாக்கல் செய்து அதில் தீர்ப்பாணை பெற்றேன். அந்த வழக்கில் கண்ட பார்த்தசாரதி என்ற நபருக்கு நான் எவ்வளவு ரூபாய் பணம் கடன் கொடுத்தேன் எந்த

தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் மூன்று லட்சம் கொடுத்தேன். தேதி நினைவில்லை. அதேபோல் ஜான் ஜோசப் என்ற ஒரு நபர் மீது அவர் எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். பாரத் டிஜிட்டல் விஷன் என்ற நிறுவனத்தில் நான் ஒரு பங்குதாரர் ஆவேன். நான் அந்த நிறுவனத்தில் பங்குதாரர் என்பதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இருக்கிறது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாரத் டிஜிட்டல் விஷன் என்ற நிறுவனம் யாரால் எங்கு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் அதை நிறைய நபர்கள் சேர்ந்து ஆரம்பித்ததால் நினைவில்லை. பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் கூட்டுப் பங்கு வியாபார ஒப்பந்த பத்திரம் என்னிடம் காட்டப்படுவது ஆகும். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் கூட்டுப் பங்கு வியாபார ஒப்பந்த பத்திரத்தில் எனது பெயர் இல்லை. பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் ஒப்பந்தம் தொடர்பாகவும் அதன் செயல்பாடுகள் தொடர்பாகவும் கோடி என்பவருக்குத்தான் தெரியும். எனக்கு தெரியாது. அந்த பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் கூட்டுப் பங்கு வியாபார ஒப்பந்தம் துவங்கப்பட்டது 27.11.2014 ஆகும். பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் யார் என்று எனக்குத் தெரியாது. அதற்கு நியமனம் செய்யப்பட்ட ஆர்பிட்ரேட்டர் யாரென்று எனக்குத் தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள நிபந்தனைகளின் படி மூன்று Designated

Partners –ல் இரண்டு Designated Partners கையெழுத்து செய்தால்தான் செல்லுபடியாகும் என்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2005 ஆம் வருடம் முதல் 2014ஆம் வருடம் வரை ஸ்டார்வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. நான் அங்கு வேலை பார்த்ததற்கும் அங்கு சம்பளம் வாங்கியதை காண்பிப்பதற்கும் என் தரப்பில் ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் ஸ்டார் வியூ கேபிள் டிவி நிறுவனத்தில் எந்த காலத்தில் வேலை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் தான் உதவியாளராக இருந்தேன் என்றால் சரியல்ல. அதற்கான ஆதாரங்கள் பிரதிவாதிகள் வசம் இருக்கிறது என்றும், பிரதிவாதிகள் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறார்கள் என்றால் ஏற்றுக்கொள்கிறேன். முதல் பிரதிவாதி கேபிள் டிவி தொழிலை இனாம்தார் தோப்பு, தென்னூர் பகுதியில் செய்து வருகிறார். எனக்கு அவரை 2007 ஆம் வருடத்தில் இருந்து தெரியும். அவர் அதற்கு முன்பு எத்தனை வருட காலமாக கேபிள் டிவி தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. இரண்டாம் பிரதிவாதி முரளி என்பவர் மலைக்கோட்டை பகுதியில் கேபிள் டிவி தொழில் செய்து வருவதாக கேள்விப்பட்டு இருக்கிறேன். முரளி எத்தனை வருட காலமாக கேபிள் டிவி தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதியும் இரண்டாம் பிரதிவாதியும் வெவ்வேறு பகுதிகளில் தனித்தனியாக கேபிள் டிவி தொழில் செய்து வரும் நிலையில் என்னை அணுகி என் மூலமாக சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் எதற்காக பணம்

Advocate

பெற்றுத்தர கேட்டார்கள் என்றால் இருவரும் பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தில் இருந்ததால் அவர்களின் தனிப்பட்ட கேபிள் டிவி தொழில் அபிவிருத்திக்காக பணம் பெற்று தர கேட்டார்கள். முதல் பிரதிவாதிக்கு ஏற்கனவே சூர்யா பைனான்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு இருக்கக்கூடிய விவரம் எனக்கு தெரியாது. அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் தில்லைநகர் பகுதிகளில் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் 1990 ஆம் வருடத்தில் இருந்து கேபிள் டிவி தொழில் செய்து வருகிறார்கள் என்றும், 2015 ஆம் வருடம் அவர்களுக்கு தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் கடன் வாங்கிக் கொடுத்ததாக சொல்ல கூடிய தேதி 12.10.2015 ஆகும். அந்த தேதியில் இந்த வழக்கில் கண்ட இரண்டு பிரதிவாதிகளும் சேர்ந்து கையொப்பம் செய்து பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார்கள். அந்தக் கடனை அனுசரித்து ஒவ்வொரு மாதமும் வட்டி தொகையும் செலுத்தி வந்தார்கள். அவர்கள் நேரடியாக சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி வந்தார்கள். பின்னர் 22.04.2016 அன்று மீண்டும் பணம் கடன் கேட்டார்கள். இரண்டாவது முறையாக ரூபாய் 4 லட்சம் கேட்டிருந்தார்கள். இரண்டாவது முறை பணம் கடன் வாங்கிய போது முதல் தடவை வாங்கிய ரூபாய் 4 லட்சத்தையும் இரண்டாவது முறை வாங்கிய ரூபாய் 4 லட்சத்தையும் சேர்த்து பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார்கள். சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் என்னிடம்

தனிப்பட்ட முறையில் ஜாமீன் வகைக்காக பொறுப்பாளியாக கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். அதைத் தவிர்த்து என்னிடம் மேலும் சில ஆவணங்களிலும் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தினர் தான் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டை எனக்கு Made over செய்து கொடுத்தார்கள். நான் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு எழுதிக் கொடுத்த பொறுப்பு ஆவணங்கள் எதுவும் என்னிடம் திரும்பத் தரவில்லை. சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு நான் கொடுக்க வேண்டிய பணங்கள் அதிகமாக இருப்பதால் அவர்கள் அந்த ஆவணங்களை எனக்கு தரவில்லை. நான் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்றால் கணக்கை பார்த்து தான் கூற முடியும். நான் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் பணம் கடன் வாங்கி கொடுத்தேன் என்பதை தொடர்பான ஆவணம் வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் சுமார் 25 நபர்களுக்கு கடன் வாங்கிக்கொடுத்திருப்பேனா என்றால் 4 அல்லது 5 நபர்களுக்கு வாங்கி கொடுத்திருப்பேன். நான் அவ்வாறு சூர்யா பைனான்ஸில் இருந்து பணம் கடன் வாங்கி கொடுத்த நான்கு அல்லது ஐந்து நபர்களும் எனது நண்பர்கள் ஆவார்கள். அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரி என்னால் கூற இயலாது. நண்பர்கள் பெயரை என்னால் எதனால் கூற இயலாது என்றால் லிஸ்ட் பார்த்து தான் என்னால் சொல்ல முடியும். பாரத் டிஜிட்டல் விஷன் தற்போது இல்லை. பாரத் டிஜிட்டல் விஷன் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலும் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது.

Verdictum.in

அந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் அதில் உள்ள பணம் எனக்கு வரவில்லை. பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தில் இருந்து எனக்கு வர வேண்டிய பணம் தொடர்பாக நான் நாளது தேதி வரை எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கடன் வாங்கிக் கொடுத்ததாக கூறும் காலத்தில் பிரதிவாதிகள் இருவரும் பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தில் Designated Partners ஆக இருந்தார்கள் என்றால் சரிதான். அதனால் அந்த நிறுவனத்தின் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த காலகட்டங்களில் இந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகள் தங்களின் தனிப்பட்ட கேபிள் டிவி தொழிலில் கவனம் செலுத்தாமல் இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கோடி என்ற நபர் பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் ஆவார். பிரதிவாதிகள் இருவரும் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு 2016 ஆம் வருடம் அக்டோபர் மாதம் வரை வட்டி செலுத்தி வந்தார்கள். 2016 ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து செலுத்த வேண்டிய வட்டி தொகைகளை செலுத்தவில்லை என்று எனக்கு யார் தெரிவித்தார்கள் என்றால் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தினர் தெரிவித்தார்கள். நான் பிரதிவாதிகளை நேரில் சென்று பணம் கேட்டேனா என்றால் நான் கேட்டபோது அவர்கள் பாரத் டிஜிட்டல் விஷன் பிரச்சனை ஓடிக்கொண்டிருக்கிறது என்றும் அதன் பிறகு பார்த்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். பாரத் டிஜிட்டல் விஷன் பிரச்சனை எந்த வருடத்தில் இருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் அது தொடர்பாக எந்த வருடம் புகார் கொடுக்கப்பட்டது என்பதும் எனக்கு

Vadodara

தெரியாது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பாரத் டிஜிட்டல் விஷன் சம்பந்தமாக நடைபெற்று வருவதாக சொல்லக்கூடிய வழக்கு யாரால் தாக்கல் செய்யப்பட்டு என்ன காரணத்திற்காக நிலுவையில் இருக்கிறது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது. நான் வேண்டா வெறுப்பாக பதில் அளித்து வருகிறேன் என்றும் ஏற்கனவே அளித்த பதிலில் வழக்கு நடைபெற்று வருவதாக தெரிவித்துவிட்டு தற்போது அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.